சுருக்கம்

பொதுப்பணிகள் – நில அளவை மற்றும் நிலவரித்திட்டம் – புல உதவியாளர் இனத்திலிருந்து பணிமாறுதல் மூலம் நில அளவராக நியமனம் – திரு. ஜெகந்நாதன் மற்றும் 51 நபர்களுக்கு வயது வரம்பு குறித்து விதித் தளர்வு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை,
நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட அலகு, நிஅ4(1) பிரிவு

அரசாணை (2டி) எண்.106

நாள்: 17.04.2018,
விளம்பி, சித்திரை 4,
திருவள்ளுவராண்டு–2049,

படிக்கவும்.

நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரின் கடித எண்.ந1/ 14009/2016 (நி.அ), நாள் 19.10.2016 மற்றும் 20.12.2017.

-----

ஆணை:

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு நிலஅளவை மற்றும் பதிவேடுகள் சார்நிலைப் பணி விதிகளில் விதி 7–இன்படி புலஉதவியாளர் இனத்திலிருந்து நிலஅளவராக நியமனம் பெற SSLC தேர்ச்சி பெற்று 5 ஆண்டுகள் புல உதவியாளர் பணி முடித்து, நியமன ஆண்டின் ஜூலை முதல் தேதியன்று 45 வயதை கடந்திருக்கக்கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், 01.07.2017 அன்று 45 வயதை பூர்த்தி செய்த நபர்கள் 52 என சார்நிலை அலுவலர்களிடமிருந்து விவரம் பெறப்பட்டுள்ளது என்றும், எஞ்சியுள்ள நபர்கள் 01.07.2017 அன்று முழுமையாக இரு தகுதிகளையும் பூர்த்தி செய்யவில்லை என்றும், அரசாணை எண்.122, வருவாய்த்துறை, நாள் 13.2.1998–இன்படி, ஒவ்வொரு ஆண்டும் நிர்ணயம் செய்யப்படும் நிலஅளவர் இன காலியிட மதிப்பீட்டில், 50% பணியிடங்கள், புல உதவியாளர்கள் பதவி உயர்வில் நிலஅளவராக பதவி உயர்வு பெற ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்றும், 2017–2018–ஆம் ஆண்டில் தகுதிபெறக்கூடிய நபர்களின் எண்ணிக்கை 49 என தோராயமாக கணக்கிடப்பட்டுள்ளது என்றும், புல உதவியாளர் இனத்திலிருந்து நிலஅளவராக நியமனம் பெற ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியிடங்களில் தகுதிபெற்ற நபர்கள் இல்லாததால் 112 நிலஅளவர் பணியிடங்கள் பூர்த்தி செய்யப்படவில்லை என்றும், தற்போது 52 நபர்களுக்கு வயதுவரம்பு விதி தளர்வு செய்ய அரசு கருதும்பட்சத்தில் இந்த பணியிடங்களில் தி/ள் ஜெகந்நாதன் மற்றும் 51 நபர்கள் குறித்து நிரப்பிட வழிவகை உண்டு என்றும், புல உதவியாளர்கள் களப்பணியாற்றி வருவதால் இவர்கள் நிலஅளவராக பணிமாறுதலில் நியமனம் பெறும் பட்சத்தில் இவர்களின் நீண்டகால அனுபவத்தின்படி நிலஅளவர் பணியினை சிறப்பாக செய்திட இயலும் என்பதைக் கருத்திற்கொண்டும், தமிழ்நாடு நிலஅளவைப் பதிவேடுகள் துறை சார்நிலைப் பணி விதிகளுக்குட்பட்ட பதவிகளில் இவர்கள் பணிபுரிய அரசாணையில் வகை செய்யப்பட்டுள்ளதால் இவர்களுக்கு ஒரு வாய்ப்பு வழங்கிடும் வகையிலும், புல உதவியாளர் இனத்திலிருந்து நிலஅளவராக நியமனம் பெற அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள வயதுவரம்பு விதியினை தளர்வு செய்யுமாறும் நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

Scanned by CamScanner

2. நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையரின் பரிந்துரை தொடர்புடைய ஆவணங்களுடன் நன்கு பரிசீலிக்கப்பட்டு அதனை ஏற்று, கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது:—

i) புல உதவியாளர்களாக பணிபுரியும் திரு.ஜெகந்நாதன் மற்றும் 51 புல உதவியாளர்கள் (இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள) சார்பாக, நில அளவர் இனத்திற்கான தமிழ்நாடு சார்நிலைப்பணி விதிகளில், பிரிவு 31—இல் நில அளவைப் பதிவேடுகள் சார்நிலைப் பணிகளுக்கான சிறப்பு விதிகளில், விதி 7—இல் இனம் (category) 4(i) (வயது வரம்பு விதி) மட்டும் தளர்வு செய்யப்படுகிறது.

ii) புல உதவியாளர் பணியிடத்திலிருந்து, நில அளவர் பணியிடத்திற்கு தேவையான தகுதிகளில் உச்சவயது வரம்பினை மட்டும் தளர்த்தி திரு.ஜெகந்நாதன் மற்றும் 51 புல உதவியாளர்களுக்கு தேர்ந்த பெயர்ப்பட்டியல் (Panel) தயாரிக்க நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

iii) உச்ச வயது வரம்பினை 45—லிருந்து கணிசமாக உயர்த்துவது குறித்து, அதனை பரிசீலினை செய்து தேவைப்படின், அரசுக்கு உரிய முன்மொழிவினை அனுப்புமாறு நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

3. அதற்கிணங்க, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016—இல், பிரிவு 58—இல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, புல உதவியாளர்களாக பணிபுரியும் திரு.கே.ஜெகந்நாதன் மற்றும் 51 புல உதவியாளர்கள் (இணைப்பில் உள்ளவாறு) பொருட்டு, நில அளவர் இனத்திற்கான தமிழ்நாடு சார்நிலைப்பணி விதிகளில், பிரிவு 31—இல் நில அளவைப் பதிவேடுகள் சார்நிலைப் பணிகளுக்கான சிறப்பு விதிகளில், விதி 7—இல், இனம் (category) 4(i) (வயது வரம்பு விதி) மட்டும் தளர்வு செய்து மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் ஆணையிடுகிறார்.

4. மேலே பத்தி 2—இல் உள்ள ஆணைகளின்படி, தக்க மேல்நடவடிக்கை தொடருமாறு நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

அதுல்ய மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர், சேப்பாக்கம், சென்னை—5.(இணைப்புடன்)
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
நகல்:
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை, சென்னை—9.
வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை—9.
வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை
முதன்மைச் செயலாளரின் தனிச்செயலாளர், சென்னை—9.
இருப்புக்கோப்பு/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

24/4/18
பிரிவு அலுவலர்
24/4/18

Scanned by CamScanner

இணைப்பு

அரசாணை (2டி) எண்.106, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 17.04.2018
5 ஆண்டு புல உதவியாளர் பணிமுடித்து, SSLC தேர்ச்சி பெற்ற புல உதவியாளர்களின் பணி விவரங்கள்
01.07.2017 அன்று 45 வயதை கடந்தவர்களின் விவரம்

| வ.எண். | மாவட்டம் | பெயர் | பிறந்த நாள் | புல உதவியாளர் இனத்தில் பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | சென்னை | கே.ஜெகந்நாதன் | 15.12.1967 | 12.12.2008 |
| 2. | சென்னை | ஜா.ஜார்ஜ்முல்லர் | 27.7.1968 | 12.12.2008 |
| 3. | சென்னை | பா.கணேஷ் | 26.01.1969 | 01.02.2010 |
| 4. | திருவண்ணாமலை | எஸ்.ரவிச்சந்திரன் | 17.02.1972 | 31.05.2012 |
| 5. | திருவண்ணாமலை | ஜி.லோகநாதன் | 06.05.1970 | 04.03.2011 |
| 6. | காஞ்சிபுரம் | எஸ்.ஹேமலதா | 06.01.1968 | 13.03.2008 |
| 7. | காஞ்சிபுரம் | எஸ்.வேணுகோபால் | 06.05.1965 | 25.04.2008 |
| 8. | காஞ்சிபுரம் | சி.சிவகாமி | 15.07.1966 | 18.06.2008 |
| 9. | காஞ்சிபுரம் | ந.காந்திமதி | 25.12.1965 | 25.08.2010 |
| 10. | திருவாரூர் | ஏ.ஜான்விக்டர் | 12.01.1967 | 21.11.2011 பி.ப. |
| 11. | திருவாரூர் | ஏ.ரவிச்சந்திரன் | 14.04.1967 | 24.11.2011 |
| 12. | கரூர் | எம்.சாமிநாதன் | 20.05.1972 | 31.01.2011 |
| 13. | தஞ்சாவூர் | அ.ரவிச்சந்திரன் | 15.05.1965 | 01.04.2010 |
| 14. | தஞ்சாவூர் | எம்.இளங்கோவன் | 25.04.1962 | 01.04.2010 |
| 15. | தஞ்சாவூர் | பி.புகழேந்தி | 07.05.1961 | 26.09.2011 |
| 16. | மதுரை | த.பிரபாகரன் | 31.03.1972 | 19.01.2011 |
| 17. | மதுரை | பி.வெங்கடேசன் | 14.06.1966 | 08.06.2011 |
| 18. | திண்டுக்கல் | பெ.சுப்பிரமணி | 12.03.1965 | 22.09.2008 |
| 19. | தேனி | கே.சுப்புராஜ் | 30.05.1971 | 10.01.2011 |
| 20. | தேனி | ஐ.செல்வம் | 15.06.1972 | 10.01.2011 |
| 21. | தேனி | எஸ்.கண்ணன் | 07.05.1970 | 17.04.2012 |
| 22. | விருதுநகர் | எம்.எஸ்.முருகன் | 12.05.1964 | 30.08.1994 |
| 23. | விருதுநகர் | எஸ்.சிவகுமார் | 06.09.1971 | 01.08.1994 |
| 24. | சிவகங்கை | பி.கணேசன் | 09.03.1962 | 15.03.2010 |
| 25. | சிவகங்கை | எஸ்.தமிழ்ச்செல்வன் | 27.05.1964 | 15.03.2010 |
| 26. | சிவகங்கை | எஸ்.ராஜசெல்வன் | 11.05.1965 | 15.03.2010 |
| 27. | சிவகங்கை | கே.ஆயிரவள்ளி | 24.04.1972 | 15.02.2012 |
| 28. | இராமநாதபுரம் | ஆர்.கண்ணன் | 21.03.1961 | 12.08.1995 |
| 29. | இராமநாதபுரம் | ஆ.குணசுந்தரி | 26.07.1972 | 20.03.2012 |
| 30. | இராமநாதபுரம் | வ.சரசு | 10.05.1972 | 26.03.2012 |
| 31. | திருநெல்வேலி | ஆர்.அருணாசலசாமி | 17.03.1963 | 06.10.2010 |
| 32. | திருநெல்வேலி | கே.பி.எஸ்.அலெக்ஸ் ராஜன் | 31.07.1965 | 06.01.2011 |
| 33. | திருநெல்வேலி | சே.சலீம் | 08.06.1967 | 06.01.2011 |
| 34. | திருநெல்வேலி | டி.ஜெபசீலன் ராக்லேண்ட் | 10.06.1967 | 06.01.2011 |
| 35. | திருநெல்வேலி | டி.ஜெயராஜ் சாமுவேல் | 19.05.1963 | 21.01.2011 |

Scanned by CamScanner

| | | | | |
|---|---|---|---|---|
| 36. | திருப்பூர் | யு.கே.சண்முகம் | 07.04.1968 | 28.02.2011 |
| 37. | திருப்பூர் | எம்.காளியப்பன் | 21.05.1971 | 27.12.2010 |
| 38. | ஈரோடு | பி.கே.ராதாகிருஷ்ணன் | 12.04.1970 | 06.01.2011 |
| 39. | சேலம் | கே.கம்பன் | 21.04.1967 | 21.01.2011 |
| 40. | சேலம் | எ.சக்திவேல் | 01.01.1968 | 24.01.2011 |
| 41. | சேலம் | பெ.பாஸ்கர் | 03.06.1969 | 21.01.2011 |
| 42. | சேலம் | மா.மாதையன் | 15.04.1967 | 21.01.2011 |
| 43. | நாமக்கல் | அ.சிவகுமார் | 10.06.1970 | 21.06.2010 |
| 44. | நாமக்கல் | ர.சிவலிங்கம் | 12.05.1972 | 04.03.2011 |
| 45. | கிருஷ்ணகிரி | சி.குழந்தைவேலு | 10.07.1961 | 01.12.1985 |
| 46. | நாகப்பட்டினம் | க.விஜயகுமார் | 14.10.1967 | 23.01.2012 |
| 47. | நாகப்பட்டினம் | பி.சேகர் | 10.05.1970 | 23.01.2012 |
| 48. | நாகப்பட்டினம் | பி.மனோகரன் | 28.06.1967 | 25.01.2012 |
| 49. | நாகப்பட்டினம் | ரா.கலியமூர்த்தி | 17.06.1970 | 25.01.2012 |
| 50. | நாகப்பட்டினம் | பி.பரமானந்தம் | 10.07.1970 | 27.01.2012 |
| 51. | கோயம்புத்தூர் | டி.ரவி | 10.01.1970 | 07.01.2011 |
| 52. | கோயம்புத்தூர் | எஸ்.முருகேசன் | 03.12.1969 | 07.01.2011 |

அதுல்ய மிஸ்ரா,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர் 24/4/18

Scanned by CamScanner